உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

சிவநேசன்.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

ஆண்டு ௯	யுவ தை–1936—ஜனவரி	திங்கள் ௯.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

தனவணிக சமூக நிலை.

(104-ம் பக்கத் தொடர்ச்சி)

"நம் சமூகத்தினர், சர்வ சுதந்தரர்களா யிருந்தார்களே யன்றி பிறர்க்கு உட்பட்டிருந்தார்களில்லை. ரத்னகன மகுடபூபால வைசியர்களெனப் பெயர் பெற்றிருந்தார்களென்பது உண்மை. அரசர்க்கிணையாக மகுடந்தாங்கியிருந்தார்களென்பதுதான் பொருள். அரசர்களுக்கு முடி சூட்டுவதே ஒரு கௌரவத் தொழிலென்றிருந் தாற்போது மென்று மதித்துள்ளார்கள் என்பது முற்றுந் தப்பு. ரத்ன மகுடம் ஒருநாளும் கீழேயிறக்காத பொறுப்போடிருந்தது; நாளடைவில் நாடக மேடைகளில் அரசர்கள், மதிமந்திரிகள் முதலானோர் தலைப்பாகைகளில் கலிக்கத்துராய் வைத்து அலங்கரித்துக் காட்டப்பெறுதல் போல தலைப்பாகையாக மாறிற்று. மதுரைப் பாண்டியன் ஒருவன் இவர்களை அழைத்து வந்தானென்பதும் ஓர் உபசாரமே. பாண்டி மன்னர்கள் காலத்தில் இராஜ்யத்திற்குள்ளான கோயில்களெல்லாம் அந்தந்த ஊரவர்களிடமே யிருந்தது. அந்த ஊர்களில் இவர்கள் குடியேறி அந்தந்த ஊர்ப்பெயரையே தங்களுக்குக் குடிப்பெயராக வைத்துக்கொண்டார்கள். புதுக்கோட்டை இராஜபக்கல்வெட்டுத் தொகுதி ஆயிரத்திற்கு மேற்பட்டவை அச்சிட்டு வெளிவந்திருப்பதில் கோயில்களெல்லாம் ஊரவர்களிடமே

இருந்தது; சிறிதளவுமரியாதைகட்கோ இலகுவான பிரதிப்பிரயோஜனங்கட்கோ கொடுக்கப்பெற்றிருக்கின்றன என்றுவிளக்குகின்றார் போன்று நம் நகரத்தார்கள் கோயில்களைக் கைப்பற்றியிருக்கின்றார்கள். இக்கோயில்கள் நகரத்தார்கள் சொந்த முயற்சியால் சம்பாதியம் செய்யப்பெற்றனவே. எல்லாத் தருமங்களையும் அந்தந்த கோயில் கல்வெட்டுகளில் விளக்கியிருக்கிறார்கள்". என கல்வி, அறிவு, ஒழுக்கங்களிலும் ஆண்டு அனுபவ ஆராய்ச்சிகளிலும் சிறந்தமுதியோராகிய நம்குலப்பெரியாரொருவர் தெரிவிக்கின்றனர்.

பரம்பரைத் திருப்பணிச் செல்வர் வழித்தோன்றலும் கருமையாதின மகாவித்வ சிரோன்மணியுமாகிய அமராவதிபுதூர் திருவாளர், வயி. நாக. ராம. அ. இராமநாதச் செட்டியாரவர்களால் எழுதி அச்சேற்றி வெளிவரவிருக்கின்ற "நகரத்தார் சரித்திரம்" "நகரத்தார் சுதர்மம்" (தேவாராதி திருப்பாடல்பெற்ற) "திருத்தலத்திருப்பணி வைபவம்" ஆதியவைகளின் மூலம் தனவணிக சமூக நிலைகள் முழுதும் தெளிவாகக் காணலாம்.

நம் சமூகத்தினர் அந்நாளில் தங்களின் சிறந்த மதிப்பைக் காப்பாற்றுவான் தலைகொடுக்கவும் துணிந்தனர். எட்டுத் தலைகட்கு எழு வகுப்பினர் கொடுக்க இசைந்த எழு தலைக்குமேல் ஒரு தலை கொடுக்க முன் வந்தவர்களே இளையாற்றக்குடி குக்கூடராவர். அவர்கட்கு ஒன்பது நகரசிவாலயங்களிலும் இன்றைக்கும் என்றைக்கும் முதலாவதாகத் தீர்த்தம், திருநீறு, சந்தனம், காளாஞ்சி வழங்கப் பெறுகின்றமையே அவ்வுண்மைக்குச் சான்றாகும்.

இத்துணைப் பெருஞ் சிறப்பினராக யாவராலும்மதிக்க வாழும் சீரிய இச்சமூகக்கட்டுப்பாடு என்னும் கற்கோட்டையில் சல்லிவேர்கள் புகுந்து முற்றும் சிதைத்து விடாமுன் உழவாரப்பணிபுரியவும், காக்கவும்உரியதங்கள்கடமையைத் தலைவர்கள் தாங்க முன்வரவேணடும். இம்மாபெருமைமிக்கசமூகச் சீர்குலையா துநிலைத்திருக்கவேண்டுமானல் இப்போதாவது தலைவர்கள் கவனம் செலுத்திச் சிதைந்திருக்கிற கோட்டையைச் சீரேனுத்தாரணம் செய்து நாட்டுக்கோட்டையார் என்ற பெயரை நாட்டி நிலைநிறுத்திக்கொள்ளவேண்டும். சமூகசீர்திருத்த விஷய அன்பர் பலர், தங்கள் கருத்துக்களை வெளியிட்டும், கேள்விகள் கேட்டும் இருக்கின்றார்கள். சமூக வாழ்க்கைக்கு இன்றியமையததா யிருந்த கட்டுப்பாடுகள் யாவை? அவைகளால் உண்டான நன்மைகள் எவ்வளவு? சிதைவுக்குக்காரணமென்ன? எவ்வாறு திருத்தலாம்? என அவைகளை ஆய்ந்து என் கருத்தை விளக்கவும், இயன்றவரை சமூகத் தொண்டாற்றவும் கடமை பூண்டுளேன். இனி, செய்ய வேண்டுவது யாதென விளக்குவோம்.

சமூகஒற்றுமை மிகுத்திருந்தது. தங்கள் வழக்குகளைக்கோயில் மடத்து வாசல்களின் மூலம் தீர்த்துக்கொண்டார்கள். பணச்செலவில்லாமல்வழக்குகள் தீருவதாயிருந்தன. காலாவதிசொல்லி,எழுத்து மூலம் இல்லையென்றுசொல்லி, பொய்ச்சத்தியம் செய்து ஒருவர் பொருளை மற்றொருவர் அபகரித்துக்கொள்ளமுடியாததாயிருந்தது. இதனாலேற்பட்ட நன்மைகள் பலவாயிருந்தன. இந்தக் கட்டுப்பாடு நாளடைவில் நழுவிச் சிதைந்தது. வழக்குகள் விரிந்து அரசநீதி மன்றங்களில் வந்து குவிந்தன. கோர்ட்டுக் கட்டணங்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் பெரும் பொருட் செலவும், சாக்ஷிகளைத் தழுவக் கட்டி அழைத்துச் செல்லும் சிரமமும் நேர்ந்தன. உள் நாட்டில் தீரும் வழக்குகள், உள்நாட்டில் தீரும் வியாதிகளெல்லாம் வெளி சங்கத்திற்கு வரவே வழக்கறிஞர்களுக்கும் ஆங்கில வைத்தியர்களுக்கும் ஆக்கம் உண்டாகியது. நமக்கு முட்டாள் பட்டங் கட்டி கோட்டி முதல் தொண்டமான் வரை பலரும் நம்மை ஏய்த்துப் பணம் பிடுங்கலாயினர். ஒற்றுமையிருந்தால் நம்வியவகாரங்கள் நமக்குள்ளே தீராதா?

பெண்ணைப் பெற்றோர் பெண்ணுக்குச் சீதனம் சீர்முறை கொடுத்து தக்க வரன் தேடி மணம் புரியும் வழக்கமே தொன்று தொட்டுளது. அது அளவு மீறியதால் சீதனம் கொடுக்கும்பொன் இம்மாறு பூஷணம் பூட்டும்பொன் இவ்விடை என்று இவ்விரண்டும் பெண்வீட்டார் தகுதிக்கேற்பச் செய்யலாமென இடம்விட்டு மற்ற சீர்வரிசைகளை அளவு முறைப்படி எல்லோரும் ஒரேவிதந்தான் செய்யவேண்டுமென கட்டு வைத்திருந்தார்கள். அதற்குச்சான்று இன்றைக்கும் எழுதிவரும் இசை குடிமானமும் பெண் வீட்டிலிருந்து கழுத்துரு பெற்றுவரும் வழக்கமுமேயாகும். அவ்வாறான நன்மை நாளடைவில் நழுவி எழுதுவ தொன்று செய்வதொன்றாக சீர்வரிசைகள் விரியத் தொடங்கின.

கொடுக்கும் சீதனத்திற்கு வட்டிச் சீட்டு எழுதிக் கொடுத்து பிள்ளை குட்டி பிறந்தபின் பேரில் தான் பணம் கொடுப்பார்கள். பிறந்த குழந்தைக்குப் புதுமை செய்யுங் காலத்தில் தான் பெண்ணுக்குச் சீர்வைத்த பாத்திர பண்டங்களுக்குப் புருஷன் விலாசம் தீட்டப்பெறும். இம்மாதிரி வழக்கங்கள் எவ்வளவு நன்மையாக இருந்தன. இவ்வழக்கம் நழுவி கல்யாணம் பேசினவுடனே உண்டியல் கொடுத்து உறுதி செய்யும் வழக்கம் நேர்ந்ததால் எவ்வளவு வழக்குகள் மலிந்தன என்பது கண்கூடல்லவா? நல்ல வழக்கத்தைக் கைவிடாமற் காப்பாற்றி நன்மை பெறலாகாதா? பெருந்தனவந்தர்கள் கழுத்துரு சீதனத்தை விரிவாகச் செய்து கொடுத்து சீர்வரிசைகளைக் கட்டுப்படி செய்து வந்தால் எல்லாரும் அதனைப் பின் பற்றி நடப்பார்கள். அவர்கள்விரிக்கவே அவர்களைப் போலச் செய்யவேண்டுமென்று அவர்களோடு

கூடும் பங்காளிகளில் சாமான்யராயுள்ளவர்களும்செய்யத்தொடங்கி விட்டனர். தொடங்கவே கல்யாணச் செலவுக்கு வேண்டுமே என் செய்வதென்று பெண்ணுக்குப்பணம் வாங்க ஆரம்பித்துவிட்டனர்.

பெண்ணுக்குப் பணம் வாங்கப்படாதென்ற கட்டிருந்தது. அதுவும் பெருத்த நன்மையாக யிருந்தது. பெண்ணுக்குப் பணம் வாங்க எந்தப் புண்ணியவானோ முன் வந்தது உத்தேசம் அறுபது ஆண்டுகளிருக்கலா மெனத் தெரிகிறது. ஆரம்பத்திலே இத்தூர் வழக்கத்தைத் தடுக்க கோயில் வாசல்களில் கூடிப் பேசி பெண்ணுக்கு வாங்கிய தொகையை தங்கள் தங்கள் கோயிலுக்குச் சேர்க்கச் செய்தார்கள். அப்பால் ஒருபாதியை விட்டுக் கொடுத்தார்கள். பெண்ணைப் பெற்று வளர்த்துப்பொருள் பெற்றுக் கொடுப்பார்பலராகப்பல்கினமையால்கட்டுப்பாடு சிதைந்துபோயின. சிலமுறை மகாநாடுகூடி பெண்ணுக்குத் தொகை ஒரு அளவு கட்டியும் நிலைபெறா தொழிந்தது.

பெண்ணுக்குப் பணம் வாங்குவோரைக் குறைகூறலாமா? கொடுப்பாரைக் குறை கூறலாமா வெனப் பரியாலோசித்தால் கொடுப்பார் பேரில் தான் இக்குறையைச் சுமக்க வேண்டியதாகிறது. ஏனெனில்? ஒரு ஆண்மகன் பெண்ணை இளம் பிராயத்திலேனும், சங்ககாலத்திட்டப்படி பதினாறுட்டைப் பிராயத்திலேனும், அதற்கு முன்னிருந்த வழக்கப்படி முப்பத்திரண்டாட்டைப்பிராயத்திலேனும் அதற்கு முன்னிருந்த விதிப்படி நாற்பத்தெட்டாட்டைப் பிராயத்திலேனும் மணங்கொள்ளலாம். தங்குலத்துப் பெண் கொள்ளக் கிடையாவிடில் வேற்றுப் பெண்ணையும் மணந்து கொள்ளலாம். நித்தியப் பிரமச்சாரியாக யிருக்கத் திடமிருப்பினும் இருக்கலாம். இவ்வளவு உரிமையுள்ள ஆண்மகன் எதற்காகப் பொருளைக் கொடுத்துப் பெண்கொள்ளல்வேண்டும்? பெண்ணுக்குக் கொடுத்துக் கொள்ளவேண்டியதில்லை யெனப் பலரும் உறுதிமேற்கொண்டிருந்தால் பெண்ணைச் சும்மாவைத்துக் கொண்டிருக்க முடியுமா? வேற்றுச் சாதியில் கொடுக்க முடியுமா? வேற்றுச்சாதியார் இவ்வளவு பணம் கொடுப்பார்களா? வயது வந்த பெண்ணை வாழாமல் வைத்திருக்கப்படாதென ஒரு மணமகனைத் தேடிக் கல்யாணஞ்செய்து கொடுத்துத்தானே தீரவேண்டும். பெண்ணுக்குப் பணம் எனனும் இப்பயித்தியக்கார வழக்கந்தான் பெரிய அனர்த்தங்களுக்கு இடமாகி கட்டுப்பாடுகளைப் பெரிதும் சிதைத்து விட்டதென்னலாம்.

கட்டுப்பாடு நிலவிய காலத்தில் மாப்பிள்ளை வீட்டாருக்குக் கல்யாணச் செலவு அதிகமானால் ரூபா ஐந்நூற்றுக்கு மேற்போகாது. இப்போது அது திருப்பூட்டும் சேலை ஒன்றுக்கே போதாதாக நேர்ந்திருக்கிறது. (வரும்.)

எளிமையைக் கற்பித்த ஏந்தல்.

(சென்னை தொண்டை மண்டலம் துளுவவேளாளர் உயர்கலாசாலை
தமிழாசிரியர் திரு, A. தம்பிரான் முதலியாரவர்கள்.)

இற்றைக்குச் சற்றேறக் குறைய ஆயிரத்தெண்ணூறு யாண்டுகட்கு முன்னர், ஆனுப்பெருமை மேனாட்டின்கண் எபிக்யூரஸ் (Epicurus) என்ற ஒரு பெரியார் இருந்தார். அச்சமூத்தக்காரர்கள் உலகி லரும்புவ தன் முன்னரிருந்தவராதலின் அவரது பொன்னூல்கள் முன்னூறும் நாமிழந்தவராகின்றோம். யவன தேயத்துத் தீவாகிய சாமஸ் (Samos) என்னுமிடத்தில், எதென்ஸ் நகரத்துப் பள்ளி யாசிரியரின் புதல்வராய் அவர் அவதரித்தார். தானும் பின்னர், ஆசிரியரானார்.

அங்குமிங்கு மலைந்துகொண்டு, பிறருக்குக் கற்பிக்கும்போது தானும் ஆழ்ந்த சிந்தனையும் அகன்ற அறிவையறிதலையுமுடையவராய் தேசீய விடுதலையையறவே யிழக்கப்பெற்ற யவன தேயத்தில், மனதையும் அறிவையும் திருப்தியளிக்கக் கூடிய வாழ்க்கையின் ஓர் உண்மைத் தத்துவ ஞானத்தை யாராய்ந்து கொண்டே தந்தையைப் போன்று தானும் பிற்காலத்தில் ஆசிரிமைத் தொழிலை மேற் கொண்டார்.

அவர் ஒரு சிறந்த நாட்டுழியன் என்பது அவரது வாழ்நாளறியும் வல்லுநருக்குப் புகலாதே போதரும். ஆனல் அவர் போர்க்களமே போயறியார். அவரது சண்டைகள் யாவும், துன்பம் நோயுடைவாழ்க்கை, ஆடம்பரவாழ்வு ஆகிய இத்தியாதி எதிரிகளையும், அவைகளோடு புரியும்போரால் அவைகளைத் தலையெடுக்கவொட்டாது துர்ப்பலப்படுத்தும் அவைகளின் பலன்களையும் எதிர்த்தவைகளேயாகும். அவர் தமது முப்பத்தைந்தாவது ஆண்டில் எதென்ஸ் நகரில் நிலையாகக் குடியேறினர். அவர் தாம் மிகுதியாக வைத்திருந்த சொற்ப பணத்தைக்கொண்டு அந்நகரின் நடுவில் ஓர் அழகிய தோட்டம் அமைத்தார். அத்தோட்டத்தைப் பற்றி அவருக்குப் பின்னெழுந்த நூல்கள் ஒன்றேனும் புகழாது விளங்கினதில்லை. எனவே அத்தோட்டத்தின் வனப்பும் சிறப்பும் சொல்லிலடங்கா தென்க.

அவர் பிறருக்குக் கல்வியை ஆதியிலிருந்து கற்பித்தாரில்லை. அங்ஙனமிருக்க அவரது பொங்கும் கீர்த்தி எங்கும் பரவ, யவனதேசத்தின் பல பக்கங்களினின்றும் வாலிபர் உள்ளிட்ட விருத்தர் அனைவரும் அவருடைய மாணவர்களாகப் போந்து ஆண்டு குழுமினர். எனவே மாணவர் குழு அந்நகரின் மக்கள் தொகையைவிட மிகுதியாயிற்று என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஒருவரேனும் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசும் கள்ள உள்ளத்தினராய் அவரை அணுகினாரிலர். ஏனெனின் ஆன்ற கருத்துடன் கற்பிக்கும் அவரது சீரிய முறையே அதற்குப் போதிய காரணமாகும். பரந்த நோக்கமும் விரிந்த அறிவுங் கொண்டிலங்கிய அப்

பெரியார் தமது தோட்டத்தின் வாயிற்படி வழியில் அவர் பொறித்திருந்த அறிக்கையைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் அன்பராகுனரே யல்லாது மற்றையர் இலராவார்.

"நிறைந்த ஆனந்தமும் உயர்ந்த நலனும் அளிக்கக்கூடிய இப்பவனத்தின் உதாரகுணமுடைய பராமரிப்பாளர் செல்விருந்தோம்பி வரு விருந்தினர்கட்கு, பார்லி பலகாரமும் தெளிந்த ஊற்று நீரும்கொண்டு தன்னலங்கருதாது பிறர் நலங் கருதி உபசரிக்கும் மனப்பாங்குடையவர். இப்பவனத்திற் றங்கிச் சுகித்த மாந்தர்கட்கு ஈண்டுள்ள செயற்கைப் பொருள்கள் அவர்கள் பசிப்பிணியைப் பலகாவதம் விரட்டும். அம்மட்டோடு நில்லாது இயற்கைப் பொருள்கள் அவர்களின் பசியை நோக்காதிருக்கும் வன்மையை யூட்டுவன. கருங்கன் மனத்தரும் பசியாறப் பெற்று மனங் கசிவர். எனவே நீங்கள் அங்ஙன் நலனெய்த மாட்டீர்களா?"

என்பது அவ்வறிக்கை ஆகும்.

"ஒரு கோப்பை நீரும் பார்லி, அப்பமும் மட்டும் எனக்கிருந்தால் ஜூவெஸ் (Zeus) அவர்களைப் போன்று நான் அளவிலடங்கா மகிழ்ச்சி யுறுவேன்" என்று அடிக்கடி அப்பெரியார் தனக்குள் சொல்லிக்கொள்ளுவதுண்டு. ஜூவெஸ் என்பவர் யவனர்களின் சிறந்த கடவுளராவர்.

எபிக்யூரஸ் என்ற அப்பெரியார் தமக்கு முந்திய வேதாந்திகள் கருத்தை நன்கு கற்றுணர்ந்து அமைந்து அவைகளுள் சில கோட்பாடுகளைத் தம்மையுமறியாது அவர் முன்னரே மேற்கொண்டிருந்தார்.

"இப்பிரபஞ்சம் (இயற்கையுலகு) அணுக்கள் நிறைந்து உள்ளது" என்றும் "அவ்வணுக்கள் ஒருமித்து உலகங்கள் உண்டாயதென்றும் அவைகளுக்கிடையில் (அவ்விரண்டிற்கு மிடையில்) ஒன்றுமிலா வெட்டவெளி யொன்று விடுபட்டுள்ளது', என்றும் கண்டறிந்த டெமாக்ரீடஸ் (Democritus) என்ற ஓர் தத்துவஞானியின் உயரியகொள்கையைத்தான், அவர் சிறப்பாக மேற்கொண்டிருந்தார்.

எனினும், பிரகிருதி சாஸ்திரம் ஒருபுறமிருக்க இக்கொள்கையினை முதன் முதல் மேற்கொண்டது தாமே யென்று எபிக்யூரஸ் முழுதும் நம்பியிருந்தார்.

தேசீய விவகாரங்களில் அடிமைப்பட்டு மாந்தரின் செயல்கட்கு யாண்டும் எஞ்ஞான்றும் தடையாயிருப்பவர்கள், சிறு கடவுள்களாகிய வனதேவதை, நீர்த்தேவதைகளேயாவர் என்ற குறுகிய எண்ணமுடையவர்களாய் அத்தேவதைகளை வழிபடும் யவனர்கள் நிறைந்த அந்நாட்டை, அவ்வண்ணல் நோக்கினர். மற்றும் அத்தேயமே தனக்குரிய உலகமெனக் கருதியிருந்தார். எனவே, அவர்முயற்சிகள் யாவும், அந்நாட்டினரின் துன்

பந் துடைத்து இன்பம் விளைக்கச் செய்தலும் அவர்களது தூய மனதைச் சோர்ந்த பயத்தினின்று விடுவித்தலும், ஆரோக்கிய தேகத்தில் அமைதியான மனதை யுண்டுபண்ணுதலும் ஆகிய இவை பொருட்டேயாகும்.

உலகங்களுக் கிடையே அக் கடவுளர் பரிணமித்திருக்கிறார் என்றும், தூய்மையும் இன்பமும் ஒருங்கே திரண்டான வடிவுடையவர் என்றும் அவர் அங்ஙன இன்பமயத்தராதலின் மாந்தர்களைப் பற்றியும் மாந்தர்களின் இன்ப துன்பங்களைப் பற்றியுங் கவனித்துத் தமதரிய பொழுதை வீணில் கழிக்கஎவ்வகையிலும்இயலாதவர்என்றும்அப்பெரியார்கற்பித்தார். எனவே, அவர் பொருட்டு தியாகம் செய்தலும் அஞ்சுதலும் அவசியமற்றவையாம். நன்மை, பெருந்தன்மை, தூய்மை ஆகிய இம் முக்குணமும் தமக்குத் தாமே பொருந்தி யிருத்தல் இன்றியமையாததாகும். அதுவும் கடவுளிடமிருந்து ஒருவித கைம்மாறு கருதியன்று. மனித வாழ்க்கைக்கு இம்மூன்றும் இன்றியமையாது வேண்டற் பாலன என்ற உயரிய நோக்கத்துடன் தேடுதல் வேண்டும்.

ஆங்கில மொழியில் எபிக்யூர் (Epicure) என்ற பதம் 'தன்னலங் கருதுபவன்' திண்டிப் பிரியன், என்று பொருள்படும். எனினும் எபிக்யூரஸ் (Epicurus) என்ற பெயர் வாய்க்கப்பெற்ற இப் பெரியார் தம் மாணவர்கள் மேற் கூறிய அவைகட்கு ஆளாகாமலிருப்பதற்கு ஏறக்குறைய நாற்பதாண்டுகளாக உடல் நலம் பாராதுழைத்து அவர்கட்கு நற்புத்திகள் பல புகட்டினர். இயேசுநாதரின் அரிய உரைகளைக் கற்றுத் தெளிதற்கு அகாலமாகிய நான்கு நூற்றாண்களுக்கு முன்னரே யிருந்தவராதலின் கிறித்தவவேதமாம் பைபிளைப் பற்றி அவர் ஒன்று மறியார். எனினும் கிறித்தவ மத உண்மை நீங்கலாக, இதற்குமுன் மாந்தர்க்கு ஒருபோதும் கற்பிக்கப் பெறாத உயர்ந்த கலைஞானத்தை இவர் கற்பித்தார்.

இன்பமே சிறந்த நலன் என்று அவர்கருதினர். சுயநலத்தில் ஈடுபட்டனுபவிக்கும் இன்பம் இன்பமல்லவென்றும் உடலை நோயினின்று விடுவித்தலினாலும், உளத்தை அச்சம், ஆசை ஆகிய இவைகளினின்று விடுவித்தலினாலும் உண்டாகும் இன்பமே இன்பம் என்றுந் தெளிவுபடக் கூறினர். அர்த்தமற்ற ஆடம்பர வாழ்க்கையினாலும், பண இறுமாப்பினாலும் கிடைக்கும் இன்பம் இன்பமல்ல. அவைகளைத் தவிர்த்து எளிய ஆரோக்கிய வாழ்க்கையை மேற்கொள்ளுதலினால் கிடைக்கும் இன்பமே இன்பம் என்றும் மற்றும் நல்லவை நாடி அல்லவை யகற்றும் ஆழ்ந்த அறிவையும் அநீதம் அற நெறியின் அப்பாற்பட்டதாதலின் அதைத் தவிர்த்தலையும், நீதம் நெறிமுறையின் பாற்பட்டதாதலின் அதைவிடாது மேற்கொள்

ளுதலையும் மனதை அமைவின்மையினின்று நீக்கக் கூடிய வழியையும் அளிக்கக் கூடிய ஆழ்ந்த ஆராய்ச்சியே ஒருவனுக்குரிய இன்பந் தரவல்லது என்றும் தெளிவுபட மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறிவந்தார்.

தேவதைகள், வெஞ்சங்கொண்டு அர்த்தமற்றதும் அறிவற்றதுமான வீண் சடங்குகளாகிய இடையூறுகளை விளைவிக்கும் என்று பிதற்றியச் சுறுத்தும் வீண் வாதிகளுக்கஞ்சாமல் பெருமையுடன் வாழ்தற்கும், ஒருவருக்கும் துன்பம் நேராவண்ணம்அனைவரும் சுகத்துடனும், இன்பத்துடனும், மதிநுட்பத்துடனும் வாழ்க்கை நடத்துவதற்கும் இறுதிக்காலத்துள தாம் சாக்காட்டை, "நாம் இருக்கும்போது சாக்காடில்லை, சாக்காடிருக்குமானால் நாமில்லை" என்றஉயரியகருத்தைஉறுதியாகஉளத்திருத்தி அச்சமின்றி வாழ்நாள் முடிவை எதிர்க்கவேண்டும் என்று தம் மாணவர் குழாங்கட்கு நன்கறிவுறுத்தினர்.

பண்டைத் தத்துவஞானிகள் அனைவரினும் பேரும் புகழும் வாய்ந்து விளங்கியவர் எபிக்யூரஸ் என்ற கலைஞானி ஒருவரேயாவர். அவரது மாணவர்கள் அவரைப் பெரும்பாலும் வணங்கி வழிபட்டனர். தாங்கள் அணியும் ஆழிகளின் மீதும், ஆபரணங்களின் மீதும், வீட்டிற்குதவும் மற்றைச் சாமான்களின் மீதும் அப்பெரியாரது உருவமமைத்துவந்தனர். ஒவ்வோர் ஆண்டும் அவரது பிறந்தநாளைச் சீரிய முறையில் விழாவாற்றித் திருநாளாகக் கொண்டாடி மகிழ்வர். யவன நாட்டின் திலகமெனு விளங்கும் ஆதென்ஸ் நகரில் அவரது வாழ்நாட் காலத்திலேயே அவருடைய சிலையை வெண்கலத்தால் செய்வித்து நாட்டி அவரைப் பெருமைப் படுத்தினர்.

கற்க கசடற கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக.

என்ற மாதானுபங்கியின் மறைவாக்கிற் கிணங்க தான் சொற்களான் மொழிந்து கற்பித்த அவைகளைச் சொல்லளவில் மட்டுமல்லாது செயலளவிலும் செய்து காட்டினர். எளிய உணவை யுண்டும், எளிமையே ஓர் ஆபரணமாகக் கொண்டும் உயரிய நாட்டமும் உளத்தூய்மையுங் கடைப்பிடித்தும் தன் வாழ்நாளில் எளிமையை நடைமுறையால் நடாத்திக் காட்டினர். பலவாண்டுகள் பிணியால் வருந்திய அவர் தேக மிக மெலிவுற்றதனல் அவரது வாழ்க்கையின் இறுதி நாட்களில் உயிரினு முயர்வாகக் கருதிய தனது தோட்டத்திற்குச் சென்றின்புற இயலாதவரானர். இந்நிலையில் அவர் சின்னாட்களுக் கெல்லாம் பொன்னுடேகப் பருவுடலை நீத்தார். இந்நிலவுலகில் புலானுடம்பைப் போக்கிப் புகழுடம்பு நிலை நாட்டிய அவரது மாணவரனைவரும் உலகின் பலபிரிவுகட்கும் போந்து அவரது சீரிய கொள்கைகளைப்பரப்பித்தமதாசிரியர் புகழைப் பரந்து நிலவச் செய்தனர்.

அவருக்குப் பின்னர், அவரது பொன் போன்ற மொழிகள் யாவும் தவறெனக் கொண்ட சிலர் இன்பம் ஒன்றைத்தான் அவர் நாடினதாக அவர் மாட்டுக்குறை கூறினர். ஆனால் சின்னூலாய்ந்த அவ்வொரு சிலர் உண்மை இன்பம் எத்தகைத்து என்றும் அஃதடைதற்குரிய வழிகள் எவை என்றும் அவர் கற்பித்துள்ள அவ்வறிவுரைகளை முற்று முணராது மறந்தனர்போலும்! இத்தகைய எதிர்ப்புக்களிருப்பினும் அவரை யன்புடன் பின் பற்றியவர்கள் பலராவர்.

உரோமாபுரியில் அவரது கோட்பாடுகள் பழக்கத்திற் கொண்டுவரப் பட்டது மன்றி தவறுகவும் கையாளப்பட்டன. ஐரோப்பாவில் அக்கோட்பாடுகள் புத்தறிவு பெற்று மீண்டும் எழுந்தன. இங்ஙன் அவரது சீரிய கொள்கைகள் யாண்டும் பரவ தற்போதுள்ள கிறித்தவ பாதிரிமார்களும் அவைகளை அன்புடன் கைக்கொள்ளுகிறார்கள்.

வேறு எந்த தத்துவஞானியும் அவரைப்போன்று அத்துணை எழுதிப் போந்தார்களில்லை யென்றே துணிந்துரைக்கலாம். அவரது அரிய நூல்கள் பல அழிந்து போயின. எனினும் அவரது கொள்கைகளைப் பற்றி அவரால் அவர் கைப்பட எழுதப் பெற்ற கடிதங்களும் வேதாந்தத்தின் நுண் பொருள்களும் மாளாது உயிர் பெற்றிலங்குவதனோற்றான் லுயூக்ரெஷஸ் (Lucretius) எனும் கவிதையில் அவரது நல்லுரைகள் யாவும் அழிந்து படாமல் பளிங்கென மிளிர்கின்றன.

இறுதியாக, தனது கொள்கைகளுள் சிறந்ததாகிய தன்னலங்கருதாது பிறர் நலங் கருதும் பெற்றியே அனைவரும் மேற்கொள்ள வேண்டிய சீரிய முறையும் நன்னெறியும் ஆகும் என்று பன்முறையும் தன்மையுடன் மொழிந்து அதனால் நன்மையை யடைய வேண்டிய அப்பெருமானுருக்கு இந்நிலவுலகம் என்றும் நீங்கா நன்றியறிதலைச் செலுத்துமாக.

எனவே அன்பர்களே! எளிய வாழ்க்கையை நடை முறையிலும் நடாத்திக் காட்டி அதனாலுயர்வடைந்த அப்பெரியாரின் சரிதத்தை யாரா யுங்கால் நம் முள்ளத்தும் அவ்வுணர்ச்சி எழவில்லையா? வீண் விவகாரங்களில் அவமே காலத்தையும் பொருளையும் செலவிடாது தன்னலமற்ற தியாகிகளாய் இவ்வுலகில் வாழ்ந்து இறையருளைப் பெற முற்படுவோமாக.

இறையருள் யாண்டும் இனிதே நிலவுக.

[இக்கட்டுரை "The man who taught Simplicity" என்ற ஆங்கிலக்கட்டுரையின் மொழிபெயர்ப்பாகும்.]

பதினோராந் திருமுறையுள் ஒருபாவின் பொருள்.

(காஞ்சிபுரம் திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள்.)

"ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றுருங்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று—நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர்"

என்பது பதினோராந் திருமுறையுள் ஐயடிகள் காடவர்கோன் நாயனர் அருளிய க்ஷேத்திர திருவெண்பாக்களுள் ஒன்று.

அத் திருமுறையைப் பதிப்பித்த சென்ற காலத் தமிழ்ப் புலவர் ஸ்ரீமான் திரிசிரபுரம் சோடசாவதானம் சுப்பராய செட்டியார் அவர்கள் (சுக்கிலஞு தைமீ) "அவ்வோடுகின்ற" என்ற பாவின் மூன்ரும் அடியின் "நல்லச்சிற்றம்பலம்" என்றதொடரினை "நல்ல - சிறு - அம்பலம்" எனப் பிரித்துக் "கரிய சிறிய பொதுவிடம்" எனக் குறிப்பும், "நரகம் என்பது பொருள்" எனக் கவிக்கருத்தும் எழுதினார்கள். அவர்கள் கருமை என்ற பண்புப்பொருள்சுட்டும் நல்ல என்ற தெலுங்கு மொழியே தமிழில் திசைச்சொல் வழக்கில் கலந்ததெனக் கருதினார்கள் போலும்.

"உழந்தாலும் புத்தச்சொன் றிட்டூர்தல் தேற்ருது
இழந்தார் பலரால் இடும்பைநீர் யாற்றுள்
அழுந்துமால் அப்பண்டி யச்சிறு முன்னே
கொழுஞ்சீலங் கூலியாக்கொண் டூர்மின்பாகீர்"

என்ற சீவகசிந்தாமணியின் முத்தி இலம்பகத்து இருபத்து மூன்ரும் பாவாலும், அப்பாவின் உரையாலும், அந் "நல்லச்சிற்றம்பலம்" என்ற தொடரினை "நல் - அச்சு - இற்று - அம்பலம்" எனப் பிரித்துப் பொழிப்புக்கோடல் கவிக் கருத்தாகும் என யான் எண்ணுகின்றேன்.

அவ் "வோடுகின்ற" என்ற பாவின் பொருள் - நல்ல நெஞ்சே! (உலகில் ஒருவரின்) நடக்கை நீங்குதலும், (இளமை நீங்கி மூப்பால் இல்லில் தங்குதலும்) (அவர்தம்நலத்தினை) விரும்பி நின்ற சுற்றத்தினரும் (அவரை) வெறுக்கின்ருர்கள். (அவ்வெறுக்கும் வழக்கினை நீயும் அறிந்தனையன்றோ? ஆதலால், உனக்கு) மூப்புங்குறுகிற்று (நின்) நல்லஉயிராகிய அச்சு ஒடிந்து (உடலாகிய பண்டி, இல்லின்முன் திண்ணையாகிய) அம்பலத்தே சேரா முன் (நீ) தில்லைப்பதியின் திருச்சிற்றம்பலத்தே (எழுந்தருளியுள்ள ஆனந்தக் கூத்தரின் திருவடிகளை) வாழ்த்துக. (என்றபடி)

ஒருவர் உயிருடன் வாழ்ந்த காலத்தே அவருக்குப் பலதிறத்தினர் அன்பராய் இருப்பர். அவர் சாக்காலத்தே அல்லது செத்தபின் அவர் அன்பர்களிற் பலர் அவரை அணுகிப் பார்த்துத் தங்கள் அன்பையும், பிரிவாற்ருமையையும் காட்டித் துயராற்றக் கூடாதவராய் இருப்பர். அத்தகையரும் அணுகித் தங்கள் அன்பையும், பிரிவாற்ருமையையும் காட்டித் துயராற்றும் பொருட்டுச் சாக்காலம் நெருங்கியவரை அல்லது செத்தவரை அவர் தம் இல்லின்முன் (திண்ணையில்) கிடத்துதல் நந்தமிழ்த்தேயத்தின் பெரும்பாலார் வழக்கு. இல்லின்முன் கிடத்தும்வழக்கினை இல்லுள் உயிர்நீப்பின் நீத்த உயிர் அவ்வில்லில் உள்ளாருக்கு ஊறுசெய்யும் என்று சாக்காலத்தவரை அல்லது செத்தவரை இல்லின்முன் கிடத்துதல் வழக்கென்பாரும் உளர். அப்படியாளுல், செத்தார் உயிரோடு இருந்த காலத்தே அவரிடத்தே பெற்ற நன்றியையும், அன்பையும் மறந்தபடியாம். ஆதலால் அவர் கூற்றுக் கோடற்பாலதன்று. மூப்புக் குறுகிற்று என்றதால் இளமை நிலையாமையும், அம்பலம் நண்ணுமுன் என்றதளுல் யாக்கை நிலையாமையும் கூறினர். அமபலம்-சுடலையும் ஆம். சேர்தல் வாழ்த்தல் என்றது, திருக்குறள் "மலர்மிசை ஏகினன்" என்ற கடவுள் வாழ்த்தின் (உரையாசிரியர் பரிமேலழகர்) உரைக்குறிப்பால்,

"அரியகற்று ஆசற்ருர் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு".

கந்தபுராணம்.

குமரர் சிறைபுகுபடலம் 125-வது செய்யுளுரை.

(சுதுமலை சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள் அவர்கள்.)

எம்பிரா னின்னைமுக்க ணெந்தையை வணங்கநேரிற்
றம்பெரு வடிவங்காணச் சாருவ ரொழிந்த காலை
யும்பர்கோன் முதலோர்தத்த முருக்கரந் துழல்வர்வான்மேல்
வெம்பணி சிலைகண் மாறும் வெய்யவர் நிலைமையேபோல்.

(இ-ள்.) எம்பிரான் - எங்கள் கடவுளே!, உம்பர்கோன் முதலோர் - தேவர்க்கரசனாகிய இந்திரன் முதலாயினோர், நின்னை முக்கணெந்தையை வணங்கநேரில் - தேவரீரையும் மூன்று திருக்கண்களையுடைய சிவபிரானையும் பணியப் புகும்பொழுது, தம்பெருவடிவம் காண சாருவர் - தங்கள் பெரிய உருவம் எவர்க்குந் தோற்றுமாறு லாவுவார்கள், ஒழிந்தகாலை - மற்றைய காலங்களில், வான்மேல் வெம்பணி சிலைகள் மாறுஆம் வெய்யவர் நிலைமையே போல் - ஆகாயத்திலுள்ள கொடிய இராகு கேதுக்களதும் வானவிற்களதும் சூரியன் முதலியகிரகங்களுக்கெதிராக (அவ்வக்கிரகங்களைப்போலத்) தோன்றும் தீக்கிரகங்களதும் இயற்கையையே போல, தத்தம் உரு கரந்து உழல்வர் - தங்கள் தங்கள் வடிவத்தை மறைத்துத் திரிவார்கள் எ - று.

இராகு கேதுக்களும் பிறவும் கிரகண முதலிய தோன்றுங் காலங்களின் மாத்திரந் தோன்றி ஏனைக்காலங்களின் மறைந்திருத்தலின் உவமித்தார். மாறும் வெய்யவர் - பிரதி சூரியன் பிரதி சந்திரன் முதலாயினோர். அவை தீங்குநேருங் காலங்களிற் றோன்றுவன. என்று யாழ்ப்பாணம் பருத்தித்துறை சமஸ்கிருத திராவிட பண்டிதரும் சோதிட கணித சித்தாந்தியும் வித்தியாவிருத்தித் தரும கர்த்தரும் சமஸ்கிருத திராவிட பண்டிதர் பிரம்மஸ்ரீ மஹா. முத்துக்குமாரஸ்வாமிக் குருக்கள் அவர்களின் மருகருமாகிய பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் வெளியிட்ட உரை இதுவே. இங்ஙனமாக சின்னக்காஞ்சிபுரம் ஸ்ரீமத். சேனாபதி நடேச செட்டியாரவர்கள் காட்டியதெளிவுரை மிகவும் வலிந்து பொருளைக் காட்டுகின்றது. அன்றியும் உவமைக்கும் ஒத்துவரவில்லை. விபரீதமாகவே யிருக்கின்றது.

கயமுகனுற்பத்திப்படலம் 70-ம் செய்யுளுரை.

மாண்டகுமவ் வலியகலன் மருப்பதனை
யெதிர்ந்து தொல்லை வைப்பினீங்கு
மீண்டியதிண் காழிரும்பி னெஃகமுதல்
வியன்படைக ளியற்கை யென்னக்
காண்டகைய தங்குரவ னுபதேச னுரையதனைக்
கருத்துட் சேர்த்தி
யாண்டகைசே ரிபமுகத்தோ னவுணருடன்
தவம்புரிவா னகலலுற்றான்.

(இ-ள்.) மாண்டகும் வலியகலன் - மாட்சிமை தக்க அந்த வலிய கீழோனான கயமுகன், மருப்பதனை யெதிர்ந்து தொல்லை வைப்பி னீங்கும் - யானைத் தந்த முதலியவற்றனுய காம்பை (பிடியை) யடைந்துபழைய இரும்பாந்தன்மையி னின்று நீங்கி, ஈண்டியதிண் காழிரும்பினெஃகமுதல் வியன்படைகளியற்கையென்ன - மிகுந்த திண்ணிய வயிரித்த இரும்பினால் வேல் முதலிய படைகளுண்டாம் இயற்கையைப்போல, காண்டகையதங்குரவனுன புக ருரையதனைக் கருத்துட் சேர்த்தி-காணத் தகுந்த தனது குருவான சுக்கிரன் வார்த்தையை மனதில் சேர்த்து, அவுணருடன் தவம் புரிவானகலலுற்றான் - அசுரர்களுடன் தவஞ் செய்தற்குச் சென்றான். என்பதாம்.

இழிதொழிலில் மாட்சிமைப்பட்டவ னென்பார் மாண்டகும் வலியகலனென்றார். கலா என்பது கீழோற்குப் பெயராதலின் ஈண்டுக்கலனென்பதற்குக் கீழோனென்று பொருளுரைத்தாம்.

வேல் முதலிய படைகளுண்டாம் இயற்கையைப்போல என்பது இரும்பானது காம்பை எதிர்ந்து பழையஇரும்பென்னும் பெயரால் அழைக்கப்படாது வேல் ஈட்டி வாள் என்னும் பெயர்களால் அழைக்கப்படுதல், கயமுகனும் சுக்கிர னுபதேச மொழியினால் பழைய முரட்டுத் தன்மை நீங்கி நற்குணனானான் என்பதாம்.

இனி இதற்கு ஆண்டகை சேர் இப முகத்தோன் என்பதை எழுவாயாக்கி யாண்டகும் வலிய கலன் மருப்பெனக் கொண்டு மாட்சிமைதக்க அந்த வலிய பூணிட்டிறுக்கிய காம்பென்றல் இத்துணைச் சிறப்பின்றாம். காப்புக்கு மொழியாம் காண்டகைய அழகுதக்க.

ஆண்டகை சேரிபமுகத்தோன் என்பதனை மேலைப்பொருட்குச் சுட்டாக்குக. அஃதாவது, ஆண்டகை சேரிப முகத்தோன் அவுணருடன் - அங்கண்முகில் படிந்துறியா மேருவினுக் கொரு சார்போய், எனக் கொள்க.

திருவெம்பாவை உரைநடை.

(குற்றலம் போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர், திருவாளர்,
ப. சிங்காரவேல் பிள்ளையவர்கள்.)

முகவுரை.

திருவெம்பாவை என்பது திருவாதவூரடிகளால் அருளிச் செய்யப்பட்ட திருவாசக மென்னும் நூலின் உறுப்புக்களுள் ஒன்று. திருவாதவூரடிகள் என்பவர் அன்புநெறி, விதிநெறி என்னும் இரண்டனுள் அன்புநெறியில் இறைவனுர் இன்ப அருளைப் பெற்று அவ்வருள் வடிவாய்த் திகழ்ந்தவராகிய பெரியார்களில் ஒருவராவர். அப்பெரியார் போன்ருர் திருவாக்கினுக்கும் ஆவ்விறைவனுர் திருவாக்கினுக்கும் வேற்றுமை ஒரு சிறிதும் இன்ரும். ஆயினும் உயிர்களின் இன்ப துன்ப நுகர்ச்சி அவ்வுயிர்களுக்கன்றி அவற்றிற்கெல்லாம் இறைவனுகிய எம்பெருமானுக்கு இல்லையாதலின் அது முற்றவும் உடைய உயிர்களிற் சிறந்த வாதவூரடிகள் முதலியவர்களால் அருளப்பெற்ற திருவாசகம் முதலியன எல்லாம் உயிர்களாகிய எம்மனேர்க்கு இறைவனுர் திருவாய் மொழியினும் இன்றியமையாச் சிறப்புடையன என்பது ஒருதலை. இதுபற்றியே.

“கைகண்ட மந்திரம் மூவர் பாடல் கைகாணுமந்திரம் கண்ணுதலோன் கூறல்” எனவும்,

“வாதவூர்ப் புனிதன் மொழிந்த வாசகமே வாசகம்” எனவும் பெரியார் கூறினர்.

இனி வாசகம் என்பது அதனை யுணர்த்தாமல் அதனுல் ஆய நூலையுணர்த்தினமையால் ஆகுபெயர். அங்ஙமாயின்,

“ஒத்த சூத்திரம் உரைப்பிற் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
ஈரைங் குற்றமு மின்றி நேரிதின்
முப்பத் திருவகை யுத்தியொடு புணரின்
நூலென மொழிப துணங்குமொழிப் புலவர்”

என்ருர் தொல்காப்பியர்.

ஆதலின் அதுபோன்ற சூத்திரப்பாவிற்கன்றிப்பிறசெய்யுட்கு நூலெனும் பெயர் இல்லையாலோஎனின்? அவ்விரண்டும் பஞ்சியைக் கொண்டு நூற்கப்படுமாறு போலச் சொல்லைக்கொண்டு இயற்றப்

படுதலாலும், எற்று நூல் மரத்தின் கோணலை நீக்குமாறுபோல் மக்கள் மனக்கோணலாகிய அறியாமையையகற்றுகின்றமையாலும் அவ்விருவகைக் காரணமும் பற்றியே நூல்போன்றலின் நூல் எனப்பட்டன. ஆகலின் காரணங்கருதியபொழுது அக்காரணங் களையுடைய செய்யுட்கள் பலவற்றிற்கும், அக்காரணம் கருதாத போது இடுகுறியளவாய் நின்று முக்கண்ணன் என்னும் பெயர் போலச் சூத்திரப்பாவிற்கும் மரபுபற்றிவழங்கும்பெயராய் நிற்றலின் நூலெனும் பெயர் எய்தியது காண்க.

திரு - சிறப்பு. இந்நூல் எப்பொருள் கூறிற்றெனின்? மெய்ப் பொருளாகிய வீடுபேறு கூறிற்று. என்னையெனில்? பொருள் சொல்லால் உணரப்பட்டது. அது முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்றும். அவற்றை,

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறை சிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை"

என்பதனுலறிக.

அப்பொருள் மூன்றனுள் முதற்பொருள் நிலமும், பொழுது மாம். கருப்பொருள் மக்கள், விலங்கு, உணவுமுதலியனவாம். உரிப் பொருள் மக்கட்குரிய அறம், பொருள், இன்பங்களாம். அப் பொருள் மூன்றனுள்,

"ஆன்றசிறப்பின் அறம்பொரு ளின்பமென
மூன்றுவகை நுதலிய துலகமவற்றுள்
அறமும் பொருளும் அகலாதாகிப்
புறமெனப் படுவது பொருள்குறித் தன்றே"

என்றுராதலின் அறமும், பொருளும் புறத்தே உணரப்படுத லால் புறமெனப்பட்டன.

"அகனைந்திணை" எனவும்,

"அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் காமக் கூட்டம்"

எனவும் தொல்காப்பியர் கூறுதலின் அகத்தே உணரப்படுவதால் இன்பம் அகமெனப்பட்டது.

இனி "பொருள்" என்பதற்கு நச்சினார்க்கினியர் அறம், பொருள், இன்பமும் அவற்றது நிலையின்மையும் அவற்றின் நீங்கிய வீடுபேறுமாம் என அதன்மேலும் விரி உரைப்பர். பேராசிரியர்,

"அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய வென்ப"

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு உலகிற்குப் பொருள் மூன்றனையும் கூறுவான், அவற்றை மும்முதற் பொருளென்றான். அவையின்றி வீடுபெறுமாறு வேறு இன்மையின் வீடும் ஆண்டுக் கூறினான் என உரை விரித்தார். பரிமேலழகியாரும் வீடு காரண வகையால் கூறப்படும் என்றார்.

இதனால் எல்லா நூல்களானும் உரைக்கப்படுவன பொருள் மூன்றே எனினும் அவற்றின் வேறாகிய வீடு பேறு சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாதலின் அதுவும் அவற்றின் நிலையின்மை காரணமாகக் கூறப்படும் என்பது. இக் கருத்துப் பற்றியே "அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே" எனவும், "அறம் பொருளின்பம் வீடென நான்கு-நிறம்படு பொருளெனச் செப்பினர் புலவர்" எனவும் வழங்குமாறறிக.

இதனால் இலக்கணவகையானும் ஏதுவகையானும் எல்லா நூல்களானும் கூறப்படுவன பொருள் நான்கு. அவற்றுள் முதல் மூன்றும் நிலையின்மையும், அவற்றின் வேறாகிய வீடுபேறொன்றே நிலையுண்மையும் என்பது பெற்றாம். பெறவே, வீடுபேறு ஒன்றே மெய்ப்பொருளாயிற்று. இதனை ஆசிரியர் திருவள்ளுவனார்,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" எனவும்,

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

எனவும் கூறினர்.

இதுபற்றி அகமும் புறமுமாகிய மும்முதற் பொருள் வகையாலேயே மெய்ப்பொருளாகிய வீடுபேறு நுவலப்படுமென்பது ஒருதலை. அவ்வாறே வீடுபேறு கூறுவான் எடுத்துக்கொண்ட ஆசிரியர் வாதவூரடிகள் "அகன் ஐந்திணை" ஒழுக்கமாகிய காமமெனப்படும் அகப்பொருள் வாயிலாக மெய்ப்பொருளாகிய வீடு பேற்றைக் கூறுவான், திருக்கோவையாரை அருளிச் செய்தும், அறம் பொருளெனப்பெறும்கைக்கிளைப்புறனாகிய "பாடாண்டிணை" என்னும் புறப்பொருள் வாயிலாக மெய்ப்பொருளாகிய வீடு பேறு கூறுவான் திருவாசகத்தை அருளிச் செய்தும் போயினர்.

இதனால் திருக்கோவையாரைக் "காமஞ் சான்ற ஞானப் பனுவல்" எனவும் திருவாசகத்தை,

"வாதவூர்ப் புனிதன் மொழிந்த வாசகமே
வாசக மதற்கு வாச்சியம்
தூசகல் அல்குல்வேய்த் தோளிடத் தவனே" எனவும்,

"அணிமொழியாம் அகப்பொருளும் புறப்பொருளும் அவனருளால்
அமைத்துப் பாடும்
மணிமொழியா ரெனப்பெற்ற வாதவூ ரடிகளடி மனத்துட் கொள்
வாம்"
எனவும் வருமாறு அறிக.

இவ்வீடு பேற்றையே பயனுகக் கொண்ட திருவாசக உறுப்புக்களில் பலவும் பெண்பாற் கூற்றுக்களாகவும் வந்தன. அங்ஙனமாயின் "பாடாண்டிணை" எனப்படும் திருவாசகத்தில் ஆண்பாற் கூற்றுக்களே யன்றிப் பெண்பாற் கூற்றுக்களும் விரவிய தென்னை யெனில்? விதிநெறி, அன்பு நெறி என்னும் இரண்டனுள் பின் நின்ற அன்பு நெறி ஆவன மகவன்பு, அடிமையன்பு, நட்பினன்பு, மனைவி யன்பு என நான்கு திறப்படும். இந்நான்கையும் முறையே புத்திரமார்க்கம், தாசமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என் ஆகம நூலார் கூறுவர். அவற்றுள் மனைவியன்பு நெறியாகிய சன்மார்க்கத்தில் நின்றவர் ஆசிரியர் வாதவூரடிகள் ஆகலின்,

"ஒன்றலா - ஈறேமுதல் அதனில் ஈறலா வொன்று
பலவாறே தொழும்பாகும் அங்கு"

என்பதுபற்றி இம்மை மறுமை வீடுபேறு ஆகிய எவ்விடத்தும் உயிர்கள் இறைவனுகிய எம்பெருமானுக்கு அடிமையே ஆயினும் அவ் இறைவனை இன்ப நுகரு முறையால் பேறெனக் கொண்டு,

"தந்ததுன் றன்னைக் கொண்ட தென்றன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன் யாதுநீ
பெற்ற தொன்றென் பால்"

என ஆண்பாற் கூற்றுக்களும் கூறியருளினூரேனும் தாம் நின்ற அன்பு நெறிக்கேற்ப முற்றவும் தலைமை உடைய இறைவனை உயிர்க்குத் தலைவனுகக் கொண்டு உயிராகிய தாம் தலைவிபோல் எஞ்ஞான்றும் பலவாறே தொண்டு செய்து அவ்விறைவன் உவக்குமாறு அன்பின் நிற்றலின்,

"பாய்பரி மேற்கொண் டென்
உள்ளங் கவர்வரால் அன்னே யென்னும்,"

என்பது முதலாகப் பெண்பாற் கூற்றுக்களும் விரவுமாறு கூறியருளினர் என்க.

இனித் திருவாசகம் பாடாண்டிணைப் பகுதியாதலுக் கேற்ப "காமப் பகுதி கடவுளும் வரையார்" என்றூர் தொல்காப்பியராதலின் 'மானுடமாதர் தேவரை நயந்தபக்கம்' எனினும் ஒக்கும்.

இனி "மைப்புறு கண்ணியர் மானுடத்தியல் பின்வணங்குகின்றார்" என்று திருப்பள்ளி யெழுச்சியில் அருளினார். ஆதலின் பெண்கள் விளையாட்டினும் இறைவனைப் புகழ்தலாகிய வழிபாடே நிகழுமாயின் அவ்விளையாட்டெல்லாம் இப்பாடல்களே பாடப்பட்டு அவர்கள் இறைவனுக்கு அன்புடையவர்களாய்ப் பெரும்பேறு பெற்று இன்புறுவார் எனவும், அதைஆடவர்களும் கண்டு பொய்ப் புகழ்கொண்டு புலம்பி வாழ்நாளை வீணாக்கா ரெனவும் திருவுளத்தில் முகிழ்த்த பெருங்கருணையால் பெண்பாற் கூற்றுக்களும் மொழிந்தருளினார் எனினும் ஒக்கும்.

இனி அப்பெண்பாற் கூற்றுக்களாவன:—பாவை, அம்மானை, பொற் சுண்ணம், தெள்ளேணம், உந்தி, தோணோக்கம், பூவல்லி, பொன்னூசல், அன்னைப்பத்து, கோத்தும்பி, குயில், கிளி, தசாங்கம், சாழல் என்பனவாகக் கூறப்படுகின்றன. இவற்றுள் பலவும் மாதர்கள் அவ்வவ்விளையாட்டில் பாடப்படும் பாடல்களே யெனினும் அவ்வவ் விளையாட்டின் பெயரே அவ்வப் பாடலின் பெயராக அமையப்பாடி அருளினார். இது பண்டைக் காலந்தொட்டுப் பாடாண்டிணைப் புலவர் வழக்கமாகவே நின்றது. இது குடநாட்டில் வழக்கில் பெருவரவிற்றாக வழங்குகின்றதென்பர். அதை அந் நாட்டார் பாற் கண்டுகொள்க. இதனால் ஆசிரியர் வாதவூரடிகள் காலத்தில் முற்பட்டவரென்பதும் கொள்ளக் கிடந்த தொன்றாம். இனி அப்பெயர்கள் விளையாட்டுக் கருவியானும் அவ் விளையாடற்றொழிலானும்வழங்குகின்றன. விளையாட்டுக்கருவிகள்:—பாவை, அம்மனை, ஊசல், கிளிமுதலியனவாம். இவற்றை,

> "பாவையும் கிளியும் தூவியஞ் சிறைக்
> கானக்கோழியும் நீல்நிற மஞ்ஞையும்
> பந்தும் கழங்கும் தந்தனர் பரசி"

என்பதனாலறிக.

இனி இப்பெண்பாற்கூற்றுக்கள் அனைத்தும் இம்மை இன்பத்தைக் கருதி அரசனையாவது கணவனையாவது இம்மை, மறுமை, வீட்டைக் கருதிக்கடவுளையாவது வாழ்த்தும் வாழ்க்தாகப் பாடுதல் அக்காலப் புலவர் வழக்கமாதலின் அதுபோலாது ஆசிரியர் வாதவூரடிகள் இறைவனையே பெரும்பேறாகக் கொள்ளும் அன்புநெறியில் நின்றவராதலின் அக்கடவுளையே வாழ்த்தும் மாதர் கூற்றுக்களாகப்பாடி யருளினார். புலவர் வழக்கம் வருமாறு:—

மாதர்கள் அரசனை வாழ்த்தும் அம்மனைவரி.

> வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன்
> ....

தூங்கெயின் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை.

எனவும்,

ஊசல்வரி.

வடங்கொள் மணியூசல் மேலிரீஇ யையை
....
குடங்கைநெடுங் கண்பிறழ வாடாமோ வூசல்.
கொடுவிற் பொறிபாடி ஆடாமோ வூசல்.

எனவும் சிலப்பதிகாரத்தில் வந்தன காண்க.

இனி இப்பெண்பாற் கூற்றுக்களாக வரும்பாட்டுக்களின் பெயர்கள் சிலப்பதிகார வுரையில் பல்வரிக் கூத்துக்கு அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டிய மேற்கோளினும் காணப்படுகின்றன. அவை வருமாறு:—

சிந்து பிணுக்கையுடன் சந்தி யோர்முலை
....
.... திகழ்செம்பொன்
அம்மனை, பந்து, கழங்காடல்—ஆலிக்கும்
பல்லாங் குழியே பகடி பகவதியாள்
நல்லார்தம் தோள்வீச்சு நற்சாழல்—அல்லாத
உந்தி யவலிடி யூராளி யோகினிச்சி.........

........ஆடுங் களிகொய்யு முள்ளிப்பூ ஐயனுக்கும்
பாடும் படுபள்ளி............
கோத்தவரிக் கூத்தின் குலம்.

இப்பெண்பாற் கூற்றுக்களில் வரும் மாதர் வாழ்த்துப் பாடல்களுள் பாவைப்பாடல், வைகறையில் நிகழ்த்தும் கடவுள் வழிபாட்டையே உட்கோளாகக் கொண்டு நின்றது.

"பன்னிரு காலமும் நால்வகை நிலத்தொடும்
தொன்னெறி மரபிற் றோன்றினர் செயலே"

எனப் பேராசிரியர் காட்டிய மேற்கோளால் காலம் பனிரெண்டெனப்படும். அவை:— பெரும்பொழுது ஆறு, சிறுபொழுது ஆறு. அவற்றுள் பெரும்பொழுது ஆறுவன: ஆவணி புரட்டாசி கார்ப் பருவம், ஐப்பசி கார்த்திகை கூதிர்ப்பருவம், மார்கழி தை முன்பனிப்பருவம், மாசி பங்குனி பின் பனிப்பருவம், சித்திரை வைகாசி இளவேனிற் பருவம், ஆனி ஆடி முதுவேனிற் பருவம் என ஆறும். சிறுபொழுது ஆறுவன:—காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை, என ஆறும். இச்சிறுபொழுது ஆறனுள் கடைக்கூறாகிய வைகறைப் பொழுதானது, மக்கள் மனத்தெளிதற்

குரிய காலமாகும். ஏனென்றால்? மக்கள் அகவுறுப்பாகிய மனமே, காலை, நண்பகல், எற்பாடு, என மூவகைப்பட்ட பகற்காலமெல்லாம் உலக முயற்சியில் நின்று இரவில் அம்முயற்சிக்குக் காரணமாகிய உலகச் சார்புகள் அனைத்தும் விட்டுத்துயிலுற்று இன்புற்று நிற்கும்.

அவ்வாறு இன்புற்று நின்ற மனம், துயில் உணர்ந்து பின் மீட்டும் உலக முயற்சியில் செல்லுமுன், தூய்மை உடையதாய் நிற்றலால் அதனை நற்காரியஞ் செய்ய விடுப்பின், இனிது சென்று அதனைப்பற்றும். இதனால் அவ்வைகறைப்போது மனந் தெளிதற்குரியகாலமெனப்பட்டுநற்காரியஞ்செய்தற்கும் உரியதாகுமென்பது நன்கு தெளியப்படும்.

இனி நற்காரியமாவது "சிறந்தது பயிற்றல்" என்றார் தொல்காப்பியராதலின் எல்லாப் பொருள்களினும் சிறந்தது வீடுபேறு ஆதல்போல் எல்லா நற்செய்கைகளினும் சிறந்தது கடவுள் வழிபாடாகிய மெய்த்தொண்டென்பதாம். அதுதான், இறைவனை மனத்தால் சிந்தித்து வாயால் வாழ்த்தி ஆக்கையால் வணக்கம் முதலியன இயற்றலாம். இம்மூவகைப்பட்ட வழிபாடுஞ் செய்யத் தகுந்த கடவுளாவர்,

"குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்றப்
புதல்வர்க்குத் தந்தையும் தாயும்—அறிவோர்க்கு
அடிகளே தெய்வம் அனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறை"

என்னும் நீதிநெறியானும்,

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை" எனவும்,

"அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே உலகு"

எனவும் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் திருவாக்குக்களானும் இம்மைப் பயன் குறித்து வாழ்த்தப்பெறும் வடிவு வெளிப்பட்ட கடவுளாவர் அறுவகையின ரென்பதும் "அப்பன்நீ அம்மைநீ ஐயனும் நீ" என்னுந் தமிழ்மறைப்படி அவ்வெல்லாமாய் நின்று வடிவு வெளிப்படாத தனிக் கடவுள் ஒருவரென்பதும் உய்த்துணரப்படும். இதுபற்றியே கடவுள் வழிபாட்டின் ஒன்றாகிய வாழ்த்துப்பகுதி கூறுமிடத்து ஆசிரியர் தொல்காப்பியர்,

"அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்று மென்ப" எனவும்,

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" எனவும்,

இருதிறப்படுத்திக் கூறினர். இதற்கு உரையிட்ட உரையாசிரியரை உள்ளிட்டோ ரெல்லோரும் தத்தமக்கு வேண்டியவாறெல்லாம் உரைத்தனர். அதனை உய்த்துணர்வார் உணர்ந்து கொள்க.

இதனால் கடவுளைப் போலப்பாவிக்கப்படும் அமரர்களிடத்தும், அவர்கள் போலல்லாத இயல்பான தனிக் கடவுளிடத்தும் மக்கள் செய்யும் வழிபாடுகளெல்லாம் காலை முதலிய எப்பொழுதுகளினும் மேம்பட்ட மனந் தெளிதற்குரிய வைகறைப் பொழுதிலேயே செய்தல் சிறந்ததாகும். இதனை,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" என்வும்,

"வைகறை யாமந் துயிலெழுந்து தாஞ்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை" எனவும்,

"புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா வென்றென்றே அலறா நில்லே" எனவும்,

பெரியார் வைகறை வழிபாட்டின் விதிகூறுமாற்றான் உணர்க. பிற வழிபாடு வந்த வழிக் கண்டுகொள்க.

இவ்விருதிறப்பட்ட கடவுளர் வழிபாடுகளுள்,

"இம்மையேதருஞ் சோறுங் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையேசிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே"

என்று பெரியார் பணித்தபடியே இம்மை, மறுமை, வீடுபேறுகள் எல்லாவற்றையும் முறையே அளிக்கும் வடிவு வெளிப்படாத் தனிக் கடவுள் வழிபாடு ஒன்றே, இப்பாவைப் பாடல் உட்கோளாகக் கொண்ட தெனினும் "மார்கழிநீ ராடேலோ ரெம்பாய்" என இப் பாவைப் பாடலினும்,

"கோழியும் கூவின குக்கில் குரல்காட்டும்
தாழியுள் நீலத் தடங்கணீர்! போதுமினோ
ஆழிசூழ்! வையத்துளம்! அண்ணல் அடியேத்திக்
கூழை நனையக் குடைந்தும் குளிர்புனல்
ஊழியு மன்னவாம் என்றேலோ ரெம்பாவாய்"

என்று அவிநயனார் காட்டிய பிற ஆன்றோர் பாவைப் பாடலினும் வருதலின், பாவைப் பாடல் முற்றுமே பிற திங்களின் வைகறைக் கடவுள் வழிபாட்டினும் மேம்பட்ட மார்கழித் திங்களின் நிகழும் வைகறைக் கடவுள் வழிபாட்டையே உட்கோளாகக் கொண்டு பாடப்படுமென்பது நன்கு துணியப்படுமென்க.

இனி அம் மார்கழித் திங்களின் நிகழும் வைகறைக் கடவுள் வழிபாடு பண்டைக் காலந்தொட்டு நம் தமிழ் மக்களால் இயற்றப் படுவதோர் நோன்பென வழங்கா நிற்கும் வழக்காறும். என்னை யெனில்? மக்களுக்குரிய ஒரு ஆண்டு தேவர்களுக்கு ஒருநாளாம். அந்நாளின் சிறுபொழுது மக்களுக்குப்பெரும் பொழுதெனப்படும். அப்பெரும் பொழுது ஆறனுள் ஒன்றாகிய மார்கழித்திங்கள், தைத் திங்கள் என இரண்டும் தேவர்களுக்குச் சிறுபொழுதின் பகுதி யாகியும், ஒருநாளின் கடைக்கூறாகியுமுள்ள வைகறையேயாகும். அவ்வைகறையின் முற்பகுதியாகிய மார்கழித்திங்களில் நிகழும் மக்களுக்குரிய இரவின் கடைக்கூறான வைகறையே மக்கள் தேவர் இருவரும் கடவுளைத்தொழுதற்குச் சிறந்த மனந் தெளிதற்குரிய காலமான வைகறையாக நின்றது.

இதனால் அது மிகப்புனிதமான காலமாம். அதுவே இருதிறத் தாரும் இறைவனை வழிபட்டு அவன் திருவருளை நிரம்பப்பெறு தற்குரிய காலமுமாயிற்று. இக்காலம், ஏனைய நாள்வைகறை யினும், பொழுது நீட்டித்தலால் மக்கள் துயிலெழுந்து கடவுளைத் தொழாதொழியின் மனமாசுபட்டு நோயின்பாற்படுவர். இதனால், மக்கள் ஏனைய திங்களின் நிகழும் வைகறையிற் செய்யும் வழிபாடு, மற்றைய சிறு பொழுது ஐந்தினும் செய்யா தொழிந்த கடவுள் வழி பாட்டின் குறைகளுக்குத்தீர்வாகிச்சிறந்ததானாற்போல மார்கழித் திங்களின் நிகழும் வைகறை வழிபாடும் ஏனைய திங்களின் நிகழா

நின்ற வைகறை வழிபாட்டின் குறைகளுக்கெல்லாங் கழுவாயாகி மேம்பட்டு நின்ற தென்க. இக்கருத்துப் பற்றியே மக்கள்,

"காலமுண்டாகவே காதல் செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண்டா னெங்கள் பாண்டிப்பிரான்தன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே"

என்னும் ஆசிரியர் திருவாக்கினுக் கேற்ப இதுவே வழிபடுங் காலமாகவும் இதிலேயே அருள் நிலையமாகிய மூலபண்டாரத்தை எம்பெருமான் வழங்கியருள்வானெனக் கொண்டும் வைகறை நோன்பெனவும், மார்கழி நோன்பெனவும் எவரும் புகழ்ந்து கொண்டாடவே மார்கழித் திங்கள் வைகறை வழிபாட்டை நோன்பென நோற்பாராயினர்.

இனி அஃதாவது:— மக்கள் மார்கழித் திங்களில் வைகறைப் போழ்தில் துயிலொழிந்து எழுந்து பலராய்க்குழீஇத் தூய நீராடிக் கடவுளை வாழ்த்திக்கொண்டே திருக்கோயிலுள் புக்கு இருக்கொடு தோத்திரங்கள் பல இயம்பி எப்பெருமானைக் கண் குளிரக் கண்டு அவன் திருவருள் நிரம்பப்பெற்று இன்புற்று வாழ்தலாம். இவ்வாறு அன்பு நெறியிற் செய்யா நின்ற அன்புடைத் தொண்டர்வழிபாட்டை ஆசிரியர் வாதவூரடிகள் திருவண்ணாமலைத் திருக்கோயிலில் சென்றிருந்தபோதுகண்ணுற்று அவ்வன்புநெறி,வழிபாட்டிற்குஇன்றியமையாததொரு திருமந்திரமாகவும், அவ்வழிபாடுஇன்னதெனப் புலப்படவும், அது எவ்வகை வழிபாட்டினும் சிறந்ததாதலின் இவ்வுலகில் நெடுங்காலம் நின்று நிலவவும்,

"மலஇருளூற்று உறங்காமல் மன்னுபரிபாக அருள்
செலமுழுக வருகவெனச் செப்பல் திருவெம்பாவை"

என்பதனால் இவ்வைகறை வழிபாட்டிற்கு முன்னின்ற இருளாகிய மலம் ஒழியப் பின்னின்ற ஒளியாகிய அருள் பெறுவது இவ்வழிபாட்டினுலா மென எம்மனோரெல்லாம் அறிந்துய்யவுந் திருவெம்பாவைப் பாடலை அருளிச் செய்தனர்.

இது திருமந்திரமாதலின் "மறைமொழிதானேமந்திரமென்ப" என்றார் தொல்காப்பியனாராதலின் அதன் நுண்பொருளாகிய மறைப்பொருள் "சத்தியை வியந்த"தாக உருவகித்துக் கொண்ட

னர் என்பர். இப்பாவைப் பாடலாகிய திருமந்திரம் மார்கழித் திங்கள் வைகறை வழிபாட்டிற்கு மந்திரமாறற் போலப் பிறமாதங்களின் நிகழும் வைகறை வழிபாட்டிற்குப் பொருந்தத் திருப்பள்ளி யெழுச்சி யென்னும் திருமந்திரமும் அருளினாரேனும் அதுவும் இம்மார்கழித் திங்கள் வைகறைக் கடவுள் வழிபாட்டிற்கு இன்றியமையாதது என்பது தோன்றத் திருவெம்பாவை இறுதிச் செய்யுளின் முதற் குறிப்பே, திருப்பள்ளியெழுச்சியின் முதற் செய்யுளின் முதற் குறிப்பின் வர அருளிச் செய்தனர். அன்றியும் திருவெம்பாவைமுதற்செய்யுளின் "மாதேவன் வார்கழல்கள்வாழ்த்திய வாழ்த்தொலிபோய்வீதிவாய்க்கேட்டலுமே" என்றருளினமையால் அதுவே திருப்பள்ளி யெழுச்சிப்பாடல் போலும் என்பதும் நன்கு தெளியப்படும்.

இதனால் பொதுவாக எல்லாவைகறை வழிபாட்டிற்கும் ஓதும் திருமந்திரம் திருப்பள்ளி யெழுச்சிப்பாடலே என்பதும், மார்கழித் திங்கள் வைகறைக் கடவுள் வழிபாட்டிற்கே உரியதாய்ச் சிறந்த திருமந்திரம் திருவெம்பாவையென்பதும் பெறலும். பெறவேபள்ளி யெழுச்சியெனப்பொதுப்படக்கூறின்மையாலும் மேற் கூறியவாறு இயைபுத் தொடர்ப்பட இரண்டு திருமந்திரங்களையும் தொடுத்தமையாலும் மார்கழித் திங்கள் வைகறை நோன்பிற்குத் திருவெம்பாவைப் பாடலோடு திருப்பள்ளி யெழுச்சிப் பாடலும் ஓதப்படும் என்பது ஆசிரியர் திருவுள்ளக் கருத்தா மென்றுணர்க. இதனால் இவ்வொழுகலாறு பாவை நோன்பெனவும் வழங்குவதாயிற்று.

இனி, "ஒருபான் சிறுமை யிரட்டியதன் உயர்பு" என்றார் தொல்காப்பியராதலின், அதற்கு உரையிட்டபோராசிரியர் அடிநிமிர்ந்தோடியதன் சிற்றெல்லையாகிய பத்தடியளவும் பாவைப் பாட்டும் அம்மனைப் பாட்டும் போலும் தரவு கொச்சகம் வருமெனக் கூறினாராதலின் பாவைப் பாடலின் இலக்கணமும் அதுவாயிற்றென்பது கொள்க.

இனித் திருவாசகம் புறப் பொருள் அகப்பொருள் இரண்டனுள் புறப்பொருளின் பாடாண்டிணையின் பாற்படுமென்பதும், பாடாண்டிணை பாடிய அக்காலப் புலவரால் பாடப்படும் மாதர் விளையாட்டுப் பெயரால் வந்த மாதர் வாழ்த்துப் பாடல்களாகிய

பெண்பாற் கூற்றுக்களும் இதன் உறுப்பினுள்ளாகப் பாடப் பட்டன வென்பதும் அவையனைத்தும், அக்காலப் புலவர்கள் போல் பாடிய பிற வாழ்த்துப் பாடல்களாகாமல், "பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின்" என்றவாறு இயல் பாகவே வினையின் நீங்கிய விளங்கிய அறிவனை தனிக் கடவுள் வழிபாடு ஒன்றேவரப் பாடப்பட்டன என்பதும், எக்காலத்தினும் செய்யப்படும் கடவுள் வழிபாட்டினும் வைகறைக் கடவுள் வழி பாடே சிறந்தது என்பதும், அதனினும் மார்கழித் திங்கள் வை கறைக் கடவுள் வழிபாடே மார்கழி நோன்பாகச் சிறந்தது என்ப தும், அதுவே அப்பெண்பாற் கூற்றுக்களுள் ஒன்றான பாவைப் பாடலின் உட்கோளாகவும், அந்நோன்பிற்கு அப்பாவைப்பாடலே திருமந்திரமாகவும் பாடப்பட்டதுஎன்பதும், அதனோடுதிருப்பள்ளி யெழுச்சிப் பாடலும் இயைபுடையது என்பதும், இப்பாவைப் பாட் டியல்பு இன்னதென்பதும் பிறவும் இம்முகவுரையாற் போந்த பொருளாம் என்பது அறிக.

இனி நிறைமொழி மாந்தரான ஆசிரியர் வாதவூரடிகளால் மொழிந்தருளப்பட்ட பாவைப் பாடலில் "சத்தியையியந்த"தெனக் கொள்ளும் அறிவு நுண்பொருள் பிறர்க்குப் புலனாகாதெனவிடுத் துப் பிறர்க்குப் புலனாகும்பருப்பொருளாகிய உலகியற்பொருளையே சிறியேன் சிற்றறிவிற் கொண்டவாறு உரைநடையால் கூறுவேன். குற்றமுளதேல் அதுகண்ட அறிஞர் அடியேனுக்கு அறிவித்து என் அறிவையும் வளர்க்குமாறு வேண்டுகின்றேன்.

திருச்சிற்றம்பலம்.

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ங
னேதேனு மாகாள் கிடந்தாளென்னே யென்னே
யீதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்.

உ

பிறர்மனை நயவாமை.

(அ[illegible]கூர் திரு, S. A. முத்தையாத் தேவர் அவர்கள்.)

கடவுளுடைய திருவிளையாடல்களுள் மிகச் சிறந்தது படைப்பு. அப்படைப்பில் முதன்மை எய்தியது மக்கட் பிறப்பு. இதற்குச் சான்று "உலகம் யாவையும் தாமுளவாக்கலும்" என்று கம்பர் கூறிய இராமாயண காப்புச் செய்யுளேயாம். அவரது படைப்பில் மக்கட் பிறப்புச் சிறப்பெய்தியது எதனால் எனின்? நன்மை தீமையை உணர்ந்து, தீயனவிலக்கி நன்மையைப் பெருக்கிச்செய்யவேண்டியவற்றைஉணர்ந்து செய்யும் பிறவி வேறு இன்மையால் இப்பிறவியே சிறந்ததாம். இதனாலன்றோ "எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதான் யாதினும் அரிதரிது காண்" என்று தாயுமான சுவாமிகளும், பிறரும்மக்கட்பிறப்பின்மேன்மையைவலியுறுத்திக் கூறியுள்ளனர். ஆகையால் இப்பிறப்பிலேயே பெறற்கரியவற்றைப்பெற மக்கள்முயலவேண்டும். அதனையே "புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாஉன்னடியென்மனத்தே வழுவாதிருக்க வரந்தரவேண்டும்" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாக்குஉணர்த்தும். இதில் அவ்வடிகள், எனக்கு நீ அளிக்க வேண்டியவற்றை அளியாது, எனது தவக்குறைவால் நான் இறந்து மறுபிறப்பை எய்தநேர்ந்து என் பற்ற புழு உருவைப் பெற்றாலும் அடியேன் உனது பொன்னடியை மறவாத அறிவை எனக்கு அருளுதல் வேண்டும் என்கிறார். இதனால், நினைக்கும் பொருளை செம்மை யறிவோடு நினைக்கும் பிறவி இப்பிறவி யன்றி வேறின்று என்பது தெளிவாம். மேலும் "என்பொழி யாக்கை யெடுப்பினும் அவர்பால் அன்பொழியாமை அருள்மதி எனக்கே" என்ற செய்யுளானும் பிறப்பின் பயன் இனிது விளங்கும். ஆகையால் பிறனில் விழையாமை முதலாகிய குற்றமெய்தாததே இப்பிறப்பின் சிறப்பாம்.

பிறனில் விழையாமையைக் கூறவந்த திருக்குறளாசிரியர் அதன்முன் ஒழுக்கமுடைமையைக் கூறுகின்றார். "ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் - எய்துவர் எய்தாப்பழி" என்றும் "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் - என்றும் இடும்பை தரும்" என்றும் கூறப்படும் இவ்விரு செய்யுட்களானும் மக்கட் பிறப்பு வாய்க்கப் பெற்றோர் ஒழுகும் ஒழுக்கத்தை நன்கு விளக்கி இருத்தல் பேரறிஞர்கள் நன்கு அறிவர்.

நாலடியாரைத் தொகுத்த பெரியார், பிறர்மனை நயவாமைக்குமுன் பொறையுடைமையை அமைத்தது அழகினும் அழகேயாம். அதாவது, பொறையையே ஆபரணமாகக்கொண்டு இல்வாழ்வார்க்கு பொறுத்தற்கரிய காமத்தைப் பொறுத்தல் கடமை என்பது தோன்றக்கூறியுள்ளார். கடைசி 79ஆம் செய்யுளாக அமைத்த யாப்பில் கூறுங்கூற்று வியக்கப்பாலதே. அது "இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினும் - இன்பத்தின் பக்கம் இருந்தைக்க - இன்பம், ஒழியாமை கண்டாலும் ஓங்கருவி நாட தலையாகா

வாறே தலை" என்பது. இதன் கருத்து செய்தொழிலில்இன்பமும் துன்பமும் உளவாகுமாஞல், பழியை நோக்கி அதனை அறவே ஒழிக்கவேண்டும் என்பதும், இன்பம் நோக்கி விரும்பல் ஆகாது என்பதுமேயாகும்.

திருக்குறளாசிரியர் பிறனில் விழையாமையில் "பிறன்பொருளாட் பட்டொழுகும் பேதைமை ஞாலத்தறம்பொருள் கண்டார்கணில்" என்ற செய்யுளை முதலில் அமைத்து, பிறரது பொருள்களிற்சிறந்த மனையாளைக்காதலித்தலைபேதைமை என்று வற்புறுத்தியது அஞ்ஞானத்தினுள் இஃதன்றி சிறந்த அஞ்ஞானம் வேறில்லை யென்பதை விளக்கும். இப்பேதைமையை "அறம் பொருள் கண்டார்கணில்" என்றும் மேலே சிறப்பித்தும் கூறுகின்றுர். பின்னே கூறும் இத்தொடர் மொழியை நோக்குங்கால் அப்பேதைமையை உடையவர்க்கு அறனும் பொருளும் இல்லைஎன்பதும், அஃதில்லாதார் அறத்தினையும் பொருளினையும் எய்தி இரண்டினுலும் உண்டாகும் இன்பத்தினையும் எய்துவர் என்பதும்வெளியாகின்றன.

நாலடியாரில் "அச்சம் பெரிதால் அதற்கின்பம் சிற்றளவால் - நிச்சம் நினையுங்காற் கோக்கொலையால் - நிச்சலும் கும்பிச்சே கூர்த்தவினையாற் பிறன்றார - நம்பக்க நாணுடையார்" என்ற செய்யுளின் மூலம் பிறன்மனை நயத்தினுல் உண்டாகும் அச்சம் முதலியவைகளின் கருத்தை நோக்குதலே சாலவும் நன்று. இம்மூதுரைகளால் தெளியப்படும் உண்மைப் பொருளை உணர்ந்தார் இவவுணர்வினை மறுப்பரோ? மறுத்தால் அவர் மனிதரெனப்படுவாரோ! மனிதராயின் பகுததறிவின் பயன்தான் எங்கே? அத்தகையார் கற்ருேராயின் அக்கல்வியின் பயன் எங்கே? கல்வியின் பயன் கற்ற முறை நிற்றல் அன்ருே?

பிறன்மனையை நயந்தார்க்கு எத்தன்மையில் சுகங்கிடைக்கின்றது என்பதைத் திருக்குறளாசிரியர் மிகவும் எளிதாகத் தெளியக் கூறுகின்றுர். "பகை பாவம் அச்சம் பழியென நான்கும் - இகவாவா மில்லிறப்பான் கண்" என்றும்; நாலடியிற் "புக்கவிடத்தச்சம் போதரும் போதச்சம்-துய்க்கும் இடத்தச்சம் தோன்றுமற் காப்பச்சம் - எக்காலும் அச்சம் தருமால் எவன்கொலோ - உட்கான் பிறனில் புகல்" என்றும், மேலும் "பிறன் தாரம் - நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென் - றச்சத்தோ டிந்நாற் பொருள்" என்றும் இரண்டு ஆசிரியரும் ஓரிடத்திருந்து ஒரே சமயத்துக் கூறியது போலக் கூறியிருத்தல் அறநிலை யுணர்ந்தாரின் உளநிலையைத் தெளிவுறுத்துகின்றன.

இன்னேர் அடையாச் செல்வங்கள் சிலவுள. அவை:— "அறம் புகழ் கேண்மை பெருமையின்ஞன்கும் - பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா" என்று கூறப்படுகினறதினுல் பிறன் தாரத்தை விரும்பினேர்களிடத்து நன்மை சிறிதும் நாடாதென்பதுஇதன்மூலம் வெளியாம். ஆனுல்நாலடி செய்யுள் மிக்க அளவோடு இச்செய்கையாளர்களுக்கு நன்மதிபுகட்டிடு முறையில் அமைக்கப்பட்டிருப்பது வியக்கப்பாலதாம்.

பிறனில்லாளை விரும்பினவர்கள் அடைந்துவரும் தெய்வத்தண்டனை யாலான உருபாது? அவர் எவ்வாறு காலங்கழிப்பர் என்பவைகளை நாலடியிலோர் செய்யுளாலறியலாம். "செம்மை பொன்றின்றிச் சிறியாரினத்த

ராய்க் கொம்மை வரிமுலையாள் தோள்மரீஇ - யும்மை - வலியாற் பிறன் மனைமேற் சென்றாரே யிம்மை-யலியாகி யாடியுண்பார்'' என்றும், திருக்குறளில் ''நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பில் பிறர்க்குரியாள் தோள் தோயாதார்'' என்றும் கூறப்பட்டிருப்பவைகள், இவ்விழைவினர்கள், ஒருருவில் ஆணும் பெண்ணுமாகிய அலிஉருவைப் பெற்றும், பல விடங்களிற் சென்று ஆடுந் தொழிலைச் செய்து அதனால் வரும் ஊதியத்தினால் உண்பவராகியும் நலம் என்பதை அடையார் என்பதையும், இவைகளைத் தோயார் நலக்குரியர் என்பதையும் இனிது விளக்குகின்றன. ''பிறன் மனைநயக்கும்பேதையும்பதரே'' என்பது வெற்றிவேற்கை.

இவ்வாறு நீதி உணர்த்தலை நோக்காது பற்பலர் தமது மனஞ்சென்ற வழியிலேயே செல்கின்றனர். ''மனம் போனபோக்கெல்லாம் போகவேண்டாம்'' என்றல் உலகநீதியன்றோ? இத்தகையாரது மனைவியையோ உடன் பிறந்தாளையோ வேறொருவர் யாரேனும் விழைந்து விடுவார்களானால் அவர்களது மனம் எத்தன்மையை அடையுமோ, அத்தன்மையைப் பிறர் மனம் அடையுமல்லவா? இஃதறியா நெஞ்சத்தைப் பகுத்தறியா நெஞ்சம் என்பதா? கல்லென்பதா? அஞ்சாமையை வாய்ந்ததென்பதா? என் சொல்வது?

பாரதத்தில் பழம் பொருந்து சருக்கத்து வீமன் கூறியதாக வில்லிபுத்தூராழ்வார் கூறிய பாடலை ஆராய்வோர் மனந் தெளிவடையாதிராது. அது ''பிறன் மனையவரைப் பெற்றதாயெனவும் பிறர் பொருள் எட்டியேயெனவும்'' என்று கூறுவதாகத் தெரிவிக்கிறது. திண்மை ஆண்மை முதலியவைகளை அடைந்த வீமசேனன், இத்தன்மையில் அடங்கி இருந்தான் என்றால், அவனது அறிவின் பெருக்கத்தை எவ்வாறு கூறுவது? இச்செய்யுளில் கூறப்படும் கொள்கையை மேற்கொண்டொழுகுவாராயின் வீமனுக்குப் புகழ் நிகழ்வுற்றிருத்தல் போல அவ்வாறு ஒழுகினர் மாட்டும் அப்புகழ் நிலைபெறுமன்றோ?

''ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான் — இந்திரனே சாலுங்கரி'' என்ற முதற் பாவலர் திருவாக்கு பிறன்மனையாகிய அகலிகையின் விழைவால் இந்திரன் அடைந்த சாபக்கொடுமையை விளக்குகின்றது. இதுவும் ''ஐம்பெரும் பூதம் எல்லாம் அடுக்கழிந் தொழியும்போது - கம்பமில் நமது நெஞ்சம் கலங்கிய தென்னைகொல்லோ'' என்று பிரபுங்க லீலையில் வரும்சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கும் பஞ்சேந்திரிய சேட்டையை அடக்குதல் நன்று என்பதை வெளிப்படுத்துகின்றன. கற்பினுக்கணியாகிய சீதையைக் காதலித்து இராவணன் பிறனில் விழைவால் அவனது சுற்றத்தோடு அவன் அழிந்தமையும் நடுநிலைவாய்ந்தார் உணர்வாராக!

தமயந்தியைக்கண்ட வேடன் அவள்மீது காதல்கொண்டு அவளைத் தொடச் செல்ல, அதுபோது சாம்பராகுக என்று வாய்மொழி அவ்வம்மை கூறிய உடனே அவ்விதமே ஆகிய தன்மையை நைடத நூலாசிரியர் ''வெய்ய அரவின் பகுவாயின் விடுத்த மடமான் எழில்நோக்கி - மையல் கூர்ந்த நெஞ்சினனாய் வரிவிற்றடக்கை வயவேடன் - தொய்யில் முலைமேற்

புல்லுதற்குத் தொடரத் துஞ்சாவருங் கற்பின் - றையல் முனிந்து நோக் குதலும் சாம்பராயிற்று அவனுடலே'' என்று கூறுமிடத்தில் கற்புடை யார்க்கு ஏற்றங் கூறியுள்ளார். இங்குநோக்குமுன்என்றது வியக்கப்பாலது.

ஆகையால், உலகத்தீரே! பிறனில் விழையாமையை மேற்கொண் டொழுகல் மக்கட் பிறப்பினரின் கடமையுள் முதற் கடமையேயாம். அத னால், அறம், புகழ், கேண்மை, பெருமை என்பவைகளைப் பெற்றுய்யலாம். மேலும், பழியினின்றும் நீங்கி வாழலாம். தெய்வத் தண்டனைக்கு ஆளா காதிருக்கலாம். இப்பழியை யுடையார் தெய்வத் தண்டனையை அடைவர் என்பது சிந்தாமணியின் ஓர் செய்யுளால் இனிது விளங்கும். "காதலாள் கரிந்து நையக் கடியவே கனிந்து கன்றி - ஏதிலான் தாரம் நம்பி எளி தென இறந்தபாவத்து-ஊதுலை உருகவெந்த வொள்ளழற் செப்புப்பாவை- ஆதகாதென்னப்புல்லி அலறும்மால்யானைவேந்தே"என்பதனால் ஆண்மகன் வருந்துதலும்பிறனில்விழைந்ததனால்உண்டானபெற்றிமையும்விளக்கமாம்.

"மாவும் மாக்களும் ஐயறிவினவே - மக்கள் தாமே ஆறறிவுயிரே" என்ற தொல்காப்பியர்; பகுத்தறிவிலாத மிருகங்களோடு, பகுத்தறியாத பண்புடைய மக்களை உடன்பாடாக்கி மாக்கள் என்றார். அந்தோ! மக்க ளாய்ப்பிறந்தோர் முதுபயனைஎய்தாது, இழிபயனை எய்தலாகுமோ? எய்த லாகாது. மிருகத்திற்கும் மக்களுக்கும் பொதுவாக நிற்கும் பெயர் மாக்கள் என்பதேயாம். மா என்பது மிருகத்தின் சிறப்புப்பெயர்; மக்கள் என்றது மனிதர்களை உணர்த்தும் சிறப்புப் பெயர்; ஆகையால் மாக்கள் என்ற பொதுப் பெயரை எய்தாது, பகுத்தறியும் தன்மையிற் பழகி "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்'' என்றபடி யொழுகி, அறநெறி மாறாது நடந்து மக்கள் என்ற சிறப்புப்பெயருக்கு உரியராகிவாழவேண்டுமென்பதுகாண்க.

"வானவர் மக்கள் நரகர்'' என்ற நன்னூற் சூத்திரத்தின்மூலம் வெளி யாகும் சிலவற்றை ஈங்கு வரைவாம். வானவர் என்ற மொழிக்கும், நரகர் என்ற மொழிக்கும் இடையே மக்கள் என்ற மொழியை அமைத்துள்ளார். இவ்வாறு அமைத்ததின் காரணம் மக்கள் எனப்படுவார் செய்யவேண்டிய அரிய செயல்களைச் செய்து, அதனால் தேவராகலாம் என்றும், செய்யத் தகாதவைகளைச் செய்தவர் நரகு எய்துவர் என்றும், உலகத்துள்ளார் அறி யும் பொருட்டு, மக்களானோர் இருவகைக் காரணத்தாலும் இருவகைக் காரியத்தையும் எய்துவர் என்பன தோன்றக் கூறியுள்ளார். இதனால் பிற னில் விழைவு முதலிய தீய செயல்களை மக்கட் பிறப்பினர் செய்யாது நல் லறிவுணர்ச்சியைப் பெற்று "ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம் - உயிரி னும் ஓம்பப்படும்'' என்ற குறட்பாவுக்கு இலக்கியமாகும்படி வாழ்ந்துவர எல்லாம் வல்ல எம்மிறை அருள் புரிவாராக!